සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| පළමු වාර පරීක්ෂණය | **2018** | **11** ශ්‍රේණිය |
| **முதலாம் தவணைப் பரீட்சை** | 2018 | **தரம் 11** |
| **First Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **குடியியற் கல்வி** | **I** | **ஒரு மணி** |
| පුරවැසි අධ්‍යාපනය | **I** | පැයක් |
| ***Civics*** | **I** | **One Hour** |

**பகுதி I**

**கவனிக்கவும்.**

- **(i)** **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **(ii)** **இல 1-40 வரையான வினாக்களுள் (1), (2), (3), (4) விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிக.**
- **(iii)** **உமக்கு தரப்பட்டுள்ள விடைப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள், நீர் தெரிவு செய்த விடையின் இலக்கத்திற்கு மேல் (x) என அடையாளமிடுக.**

(01) பண்டைய காலத்தில் நேரடி ஜனநாயகத்தின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி முறை மேற்கொள்ளப்பட்ட அரசாவது

(i) இந்தியா (ii) பிரான்ஸ் (iii) எதென்ஸ் (iv) சுவிசர்லாந்து

(02) ஐரோப்பாவில் நிலமாணிய முறை சமுதாய அமைப்பு காணப்பட்ட காலப்பகுதியாக கருதப்படுவது

(i) கி.பி.2ம் நூற்றாண்டு – 10ம் நூற்றாண்டு வரை

(ii) கி.பி.5ம் நூற்றாண்டு – 12ம் நூற்றாண்டு வரை

(iii) கி.பி.8ம் நூற்றாண்டு – 16ம் நூற்றாண்டு வரை

(iv) கி.பி.5ம் நூற்றாண்டு – 15ம் நூற்றாண்டு வரை

(03) ஒரு கட்சி முறை நிலவும் நவீன நாடுகளில் ஒன்று

(i) பெரிய பிரித்தானியா (ii) சீனா

(iii) இந்தியா (iv) ஐக்கிய அமெரிக்க குடியரசு

(04) அரசொன்றின் அடிப்படை பண்புகளை சரியாக குறிப்பிடும் விடைத்தொகுதி

(i) சனத்தொகை, அரசியல் அமைப்பு, நிறைவேற்று அதிகாரம், அரசாங்கம்

(ii) நிலம், சனத்தொகை, ஜனாதிபதி, நீதிமன்றம்

(iii) அரசியல் யாப்பு, நிறைவேற்றுத் துறை, நீதித்துறை, அரசாங்கம்

(iv) நிலம், சனத்தொகை, அரசாங்கம், இறைமை

(05) அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்டு வரும் பிரதிநிதியாவது

(i) அரசாங்கம் (ii) ஜனாதிபதி (iii) பிரதமர் (iv) சபாநாயகர்

(06) சனநாயக சமூகத்தின் பிரஜை ஒருவரால் சமூகத்துக்கு செய்ய வேண்டிய கடமைகள் 2 வகைப்படும். அவையாவன

(i) பொருளாதார மற்றும் சமூக கடமை

(ii) சட்ட ரீதியான மற்றும் பண்பாட்டு ரீதியான கடமை

(iii) சிவில மற்றும் அரசியல் கடமை

(iv) சமய மற்றும் சட்ட ரீதியான கடமை

(07) பாராளுமன்ற ஆட்சி முறையில் காணக்கூடிய பண்புகளில் ஒன்று

(i) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படும்.

(ii) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படாமை

(iii) நிறைவேற்றுத் துறையை சட்டத்துறை மூலம் நீக்க முடியாமை

(iv) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்கும் இடையில் தொடர்புகள் காணப்படாமை

(08) மத்திய அரசிடமுள்ள நிர்வாக அதிகாரங்களுள் சிலவற்றை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் கையளித்தல் என்பது,

(i) அதிகாரப் பிரிப்பு (ii) அதிகார பகிர்ந்தளிப்பு

(iii) அதிகார பன்முகப்படுத்தல் (iv) அதிகார பரவலாக்கல்

(09) ஒற்றையாட்சி அரசொன்றின் பண்பாக கருதப்படுவது,

(i) யாப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றிடம் காணப்படல்.

(ii) எழுதப்பட்ட யாப்பு காணப்படல்

(iii) மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் அதிகாரங்கள் யாப்பு ரீதியாக தெளிவாக பிரிக்கப்பட்டிருத்தல்

(iv) மத்திய அரசுக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரங்களை மீண்டும் பெறுதல்.

(10) பிரித்தானியர் ஆட்சியின் போது இலங்கையில் அதிகாரப் பரவலாக்க கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது

(i) கி.பி.1866ம் ஆண்டு (ii) கி.பி.1865ம் ஆண்டு (iii) கி.பி.1871ம் ஆண்டு (iv) கி.பி.1870ம் ஆண்டு

(11) உள்ளூராட்சி மன்றமொன்றின் கொள்கை உருவாக்கம் செய்யும் அலகாக கருதப்படுவது

(i) நகர சபை (ii) பிரதேச சபை (iii) பொதுச் சபை (iv) மாநகரச் சபை

(12) சுவிட்சர்லாந்து சமஷ்டிப் பேரவை எனும் சட்டத்துறை கொண்டுள்ள இரு மன்றுகளாவன

(i) தேசிய சபை, அரச சபை (ii) தேசிய சபை, லோக் சபை

(iii) செனட் சபை, லோக் சபை (iv) அரச சபை, செனட் சபை

(13) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் முக்கியமான அனுகூலமொன்று

(i) பல அரச சபைகளை நடைமுறைப்படுத்த முடியுமாதல்

(ii) வெவ்வேறு மதங்கள் தொடர்பாக விளக்கங்களைப் பெற முடியுமாதல்

(iii) ஒருவரை ஒருவர் மிகைத்துச் செல்ல பழக்கப்படல்

(iv) இனங்களுக்கும் இனக்குழுக்களுக்கும் இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பல்

(14) இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளுள் "வியாபார" ரீதியாக இங்கு வந்த ஓர் இனம்

(i) பேர்கர் இனத்தவர் (ii) மலே இனத்தவர்

(iii) அராபிய இனத்தவர் (iv) ஜப்பான் இனத்தவர்

(15) பொருளாதார பண்டமொன்றும் பொருளாதாரமற்ற பண்டமொன்றையும் முறையே காட்டும் பொருத்தமான விடைத் தொகுதி

(i) நீரும் காற்றும் (ii) உணவும் காற்றும் (iii) மருந்தும் உணவும் (iv) நீரும் சூரிய ஒளியும்

(16) நிலம், உழைப்பு, முதலீடு முயற்சி போன்ற உற்பத்திச் செயற்பாடுகளுக்கான கொடுப்பணவுகள் முறையே,

(i) வாடகை, கூலி, வட்டி, இலாபம்

(ii) கூலி, வட்டி, வாடகை, இலாபம்

(iii) இலாபம், கூலி, வட்டி, வாடகை

(iv) வட்டி, வாடகை, இலாபம் கூலி

(17) பொருளாதாரம் ஒன்றின் பிரதான செயற்பாடுகள் முறையே,

(i) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம்

(ii) களஞ்சியப்படுத்தல், விநியோகம், நுகர்வு

(iii) உற்பத்தி, விநியோகம், களஞ்சியப்படுத்தல்

(iv) உற்பத்தி, விநியோகம், நுகர்வு

(18) "ஒரு முறை பாவணையுடன் முடிவடைதல்" என்ற விசேட பண்பை கொண்டுள்ள பொருட்கள் வகை

(i) நுகர்வுப் பொருட்கள் (ii) இடைநிலைப் பொருட்கள்

(iii) மூலதனப் பொருட்கள் (iv) சில்லரை பொருட்கள்

(19) முதலாளித்துவ பொருளாதார முறையின் பிரதான பண்புகளில் ஒன்று

(i) உற்பத்தி காரணிகள் அரசுடமையாக்கப்பட்டிருத்தல்

(ii) உற்பத்தி காரணிகளின் உரிமை அரசு மற்றும் தனியார் இரு சாராரிடமும் காணப்படல்

(iii) உற்பத்தி காரணிகளின் பெரும்பான்மை உரிமை தனியார்துறை பெறல்

(iv) சந்தை அடிப்படையில் பொருட்களின் விலை தீர்மானிக்கப்பட்டாலும் அதில் அரசு தலையிடல்

(20) தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் நோக்கமொன்றாக அமைவது

(i) சுதந்திர வர்த்தகத்தை மேற்கொள்ளல்

(ii) பண கெடுக்கல் வாங்களை முறையாக மேற்கொள்ளல்

(iii) அரச, அரச சார்பற்ற அமைப்புக்களை ஊக்குவித்தல்

(iv) பிராந்திய வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தல்

(21) இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது

(i) 1978 – 1993 களில் (ii) 1970 – 1977 களில்

(iii) 1964 – 1970 களில் (iv) 1994 – 2004 களில்

(22) உலகமயமாதல் இலங்கை மீது ஏற்படுத்தியுள்ள பாதகமான தாக்கமொன்று

(i) பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படல்

(ii) செயற்திறன் குறைந்த உற்பத்திகள் சந்தையிலிருந்து நீக்கப்படல்

(iii) வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழிநுட்பங்களின் உள்வருகை

(iv) உலக பொருளாதார மாற்றங்களுக்கு நேரடியாக முகங்கொடுக்க வேண்டி ஏற்படல்

(23) தனியாளிடம், நபர்களிடையே, குடும்பத்துக்குள், குடும்பங்களுக்கிடையே ஏற்படும் மோதல்குறிக்கப்படுவது

(i) குடும்பத்தினுள் மோதல் (ii) நுண்மையான மோதல்

(iii) சர்வதேச மோதல் (iv) வெளிப்படையான மோதல்

(24) மோதலை தீர்க்கப் பயன்படுத்தப்படும் ஆரம்ப அடிப்படை முறை எது?

(i) பேரம் பேசுதல் (ii) ஆலோசனை முன்வைத்தல்

(iii) இணக்கப்படுதல் (iv) கலந்துரையாடல்

(25) நடுநிலையாளராகத் தலையீடு செய்யக்கூடிய சந்தர்ப்பமொன்று

(i) பொது சொத்து சம்பந்தமான பிணக்குகள்

(ii) தொழிலாளர் பிணக்குகள்

(iii) நுகர்வோர் மற்றும் வர்த்தகரிடையிலான பிரச்சினைகள்

(iv) மனித குழுக்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்த்தல்

(26) நிகழ்காலத்தில் தேசவழமைச் சட்டம் நடைமுறையிலிருப்பது,

(i) கிழக்கு மாகாணத்திலும் கொழும்பு மாவட்ட தமிழர்களுக்கும்

(ii) தென் மாகாணம், காலி மாவட்டம் வாழ் முஸ்லிம்களுக்கும்

(iii) மேல் மாகாணத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் வாழ் தமிழ்களுக்கும்

(iv) வட மாகாணத்திலும் மன்னார் மாவட்டத்திலும் வாழ் தமிழர்களுக்கும்

(27) ஒல்லாந்தர் காலத்தில் நடைமுறையிலிருந்த பிரதான நீதிமன்ற மாவட்டம் 3 ஆவன.

(i) யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி (ii) கொழும்பு, யாழ்ப்பாணம், காலி

(iii) காலி, கண்டி, அனுராதபுரம் (iv) கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம்

(28) 1973ம் ஆண்டின் யாப்பின் நீதி கட்டளைச் சட்டத்துக்கு ஏற்ப இலங்கையின் அதியுயர் நீதிமன்றாக கருதப்படுவது

(i) உயர் நீதிமன்றம் (ii) அரசியலமைப்பு நீதிமன்றம்

(iii) மேன்முறையீட்டு நீதிமன்றம் (iv) மாவட்ட நீதிமன்றுகள்

(29) மேன்முறையீட்டு நீதிமன்றுக்குள்ள அதிகாரங்கள் இரண்டை குறிப்பிடும் கூற்றைத் தெரிக.

A. வர்த்தக பிரச்சினைகளைத் தீர்த்தல்.

B. ஜனாதிபதி தேர்தல் மனுக்களை விசாரணை செய்தல்.

C. தொழிலாளர் தீர்ப்புக்கள் சபை தீர்வுகளை மேன்முறையீடு செய்தல்.

D. பாராளுமன்ற தேர்தல் மனுக்களை விசாரணை செய்தல்.

E. பல்வேறு கட்டளைகளை பிறப்பிக்கும் அதிகாரம்

(i) B யும் C யும் (ii) A யும் B யும் (iii) D யும் E யும் (iv) C யும் D யும்

(30) இலங்கையின் இறுதியானதும் உயர்வானதுமான நீதிமன்றமாக செயற்படுவது

(i) மேன்முறையீட்டு நீதிமன்றம் (ii) உயர் நீதிமன்றம்

(iii) மேல் நீதிமன்றம் (iv) அரசியலமைப்பு நீதிமன்றம்

(31) மாவட்ட நீதிமன்றுகளுக்கான நீதிபதிகளை நியமிப்பதும் பதவி நீக்கம் செய்யவும் அதிகாரமுடையவர்

(i) உயர் நீதிமன்ற நீதியரசரால் (ii) ஜனாதிபதியால்

(iii) நீதிச்சேவை ஆணைக்குழுவால் (iv) பிரதம நீதியரசரால்

(32) நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக செயற்படுபவர்

(i) சொலிசிட்டர் ஜெனரால் (ii) உயர் நீதிமன்ற நீதிபதி

(iii) பிரதம நீதியரசர் (iv) நீதி அமைச்சர்

(33) A. மேலதிக சொலிசிட்டர் ஜெனரால்

B. சட்டமா அதிபர்

C. ஓம்புட்ஸ்மன்

D. அரச சிரேஷ்ட சட்டத்தரணிகள்

E. மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவர்

இலங்கை நீதியரசரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கும் 2 அதிகாரிகளை குறிப்பிடுக.

(i) B யும் C யும் (ii) A யும் B யும் (iii) D யும் E யும் (iv) A யும் D யும்

(34) கீழ் நிலை நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது

(i) நீதிச்சேவை ஆணைக்குழு (ii) ஜனாதிபதி

(iii) நீதி அமைச்சர் (iv) உயர் நீதிமன்ற நீதிபதி

(35) பின்வரும் கூற்றுக்களின்படி,

*. டொமினிக்கன் அந்தஸ்தை இழந்து சுதந்திர அரசாதல்.

*. அரசியலமைப்பு யாப்பு ரீதியான நீதிமன்றம் தாபிக்கப்படல்.

*. இலங்கையின் இறுதி மற்றும் உயர் நீதிமன்றாக.

மேற்படி மாற்றங்களை செய்த அரசியலமைப்பாக கருதப்படுவது,

(i) 1931 டொனமூர் யாப்பு (ii) 1948 சோல்பரி யாப்பு

(iii) 1972 1ம் குடியரசு யாப்பு (iv) 1978 2ம் குடியரசு யாப்பு

(36) அடிப்படை உரிமைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை யாப்பில் உள்ளடக்கிய அரசியலமைப்பு

(i) 1978 2ம் குடியரசு யாப்பு (ii) 1972 1ம் குடியரசு யாப்பு

(iii) 1948 சோல்பரி யாப்பு (iv) 1921 மனிங் யாப்பு

(37) வட மாகாணத்தில் காணப்படும் ஒரு மாவட்டம்

(i) மட்டக்களப்பு (ii) அம்பாறை (iii) திருகோணமலை (iv) முல்லைதீவு

(38) அரசாங்க செயற்பாடுகள் பற்றி சாதாரணமாக விமர்சிக்கப்படுவது

(i) நீதிமன்றத்தில் (ii) கபினட்டில் (iii) சட்ட மன்றத்தில் (iv) எதிர்கட்சியில்

(39) 1978 ஆம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பின்படி பாராளுமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை.

(i) 196 (ii) 229 (iii) 129 (iv) 225

(40) இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொது உபயோக சேவையொன்று

(i) வீதிகளை பாதுகாத்தல்

(ii) பொது மலசலகூடம் அமைத்தல், பரிபாலித்தல்

(iii) முறையற்ற கட்டிடங்களை அப்புறப்படுத்தல்

(iv) பொது சந்தைகளைப் பரிபாலித்தல்

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| පළමු වාර පරීක්ෂණය | **2018** | **11** ශ්‍රේණිය |
| **முதலாம் தவணைப் பரீட்சை** | 2018 | **தரம் 11** |
| **First Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **குடியியற் கல்வி** | **II** | **இரண்டு மணி** |
| පුරවැසි අධ්‍යාපනය | **II** | පැය දෙකක් |
| **Civics** | **II** | **Two Hour** |

`

**பகுதி II**

***. முதலாவது வினா கட்டாயமானது**

***. முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) i. தற்காலத்தில் நேரடி ஜனநாயக முறையை செயல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக.

ii. தேசிய அரசு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

iii. தற்கால அரசுகளில் செயற்படுத்தப்படும் அரசாங்க முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

iv. சமஸ்டி அரசொன்றின் பண்புகள் இரண்டைத் தருக.

v. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் இரண்டு தருக.

vi. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

vii. சந்தை பொருளாதார முறையின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

viii. மோதல் தீர்ப்பு வழிமுறைகளுள் பேரம்பேசும் முறையின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

ix. நீதியை நிலைநாட்டுவதற்கான முக்கியமான 2 விடயங்களைக் குறிப்பிடுக.

x. 1978 2ம் குடியரசு யாப்பின்படி உயர் நீதிமன்றத்துக்கான அதிகார பொறுப்புக்கள் இரண்டு தருக.

(02) i. ஐரோப்பவில் தோன்றிய முதல் தேசிய அரசுகள் 2 இனைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. அரசாங்கத்தின் முன்று துறைகளையும் தருக. (3 புள்ளிகள்)

iii. (a) ஜனநாயக ஆட்சி முறை வெற்றி பெற அவசியமான காரணிகள் 2 தருக.

(b) சுமுகமான சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான அடித்தளமான காரணங்கள் 3 தருக. (5 புள்ளிகள்)

(03) i. 1978 அரசியல் யாப்பின் 13ம் சீர்திருத்தத்தின்படி அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ள 2 நிரல்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. தற்கால இலங்கையில் செயற்படக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. உள்ளூராட்சி மன்றொன்றின் நகரபிதா / தலைவரின் அதிகாரங்கள் பணிகள் 3ஐ குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

(04) i. "பண்பாடு" என்பதைப் பற்றி வரைவிலக்கணங்களை முன்வைத்த தத்துவஞானிகள் இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் நன்மைகள் மூன்றைக் குறிப்பிட்டு 1ஐ விளக்குக. (5 புள்ளிகள்)

(05) i. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் இரண்டை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. சமகாலத்தில் செயற்படுகின்ற நவ லிபரல்வாத சந்தை பொருளாதார முறையின் அப்படைப் பண்புகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii. இலங்கையின் புதிய அபிவிருத்தி செல்நெறிகளின்படி 1994 – 2004ம் காலப்பகுதியில் காணக்கூடிய சிறப்பியல்புகள் 3ஐக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

(06) i. இலங்கையில் செயற்படும் வேறு விசேட சட்டத் தொகுதிகள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. G.மார்சல் என்பவரால் முன்வைக்கப்பட்ட சட்டவாட்சியில் செல்வாக்குச் செலுத்தும் 3 பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. நீதிமன்ற சுதந்திரத்தைப் பேணும் வகையில் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்படுகள் 3ஐ குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

(07) i. 1947 சோல்பரி யாப்பு பாராளுமன்றின் இரு பிரதான மன்றுகளையும் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. 1865ம் ஆண்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட மாநகர சபை மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. இலங்கை சட்டத்துறை (பாராளுமன்றின்) பிரதான பணிகள் 3ஐ குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)